# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

11.08.2020 செவ்வாய்க்கிழமை


# தமிழ்க் கூட்டமைப்பினர் ஏக பிரதிநிதிகள் அல்லர்

*பஸில் திட்டவட்டம்*



கொழும்பு, ஓக. 11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் அல்லர். எனவே, தேர்தல் விஞ்ஞாபனத்தில் அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை தொடர்பில் பேச்சு நடத்துவதற்கு நாம் தயாரில்லை. எந்தவொரு நிபந்தனைகளையும் ஏற்கவும் மாட்டோம் என்று திட்ட வட்டமாக இடித்துரைத்துள்ளார்

2

## புதினம் தெரியுமோ?

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமைப் பதவியை எப்பாடுபட்டாவது கைப்பற்ற வேண்டும் என்று 'சூனா சீனா' கூட்டணி தலையால் நடக்கின்றது. நான் அடிக்கிற மாதிரி அடிக்கிறன். நீ அழுகிற மாதிரி அழு என்பதைப் போல, கட்சித் தலைமை தோற்று விட்டது. கட்சித் தலைமைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சூனா சொல்ல, எல்லோரும் இணைந்து கட்சித் தலைமையைத் தந்தால் ஏற்பேன் என்று சீனா சொல்ல, சீனாக்கு கட்சித் தலைமையைக் கொடுத்தால் வரவேற்பேன் என்று சூனா சொல்ல, இந்தக்கதை நீண்டு செல்கின்றது. இந்தக் கூட்டணியின்

2

## முன்னாள் போராளி மீது தாக்குதல்!

*பணமும் சூறையாடல்*

வவுனியா, ஓக. 11

வவுனியாவில் முன்னாள் போராளி மீது இனந்தெரியாதோர் நேற்று இரவு தாக்குதல் நடத்தியுள்ளனர். அதில் அவர் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். தமிழ் நிலம் மக்கள் அமைப்பின் தலைவர் வி.விநோதரன் என்பவர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வவுனியா கரப்பன்

2

# மாற்று வியூகத்தால் தமிழர்களை வென்றோம்

*மார்தட்டுகிறார் பஸில் ராஜபக்ஷ*

கொழும்பு, ஓகஸ்ட் 11

ஜனாதிபதி தேர்தலின்போது யாழ்ப்பாணத்தில் கிடைத்த வாக்குகளை அடிப்படையாகக் கொண்டால், பொதுத்தேர்தலில் எமது அணிக்கு ஓர் ஆசனம்கூட கிடைத்திருக்காது. எனவே, வியூகம் வகுக்கப்பட்டது. மாற்று வழி குறித்து மதிநுட்பத்துடன் சிந்தித்தோம். இதன்படி சுதந்திரக் கட்சியில் இருந்து அங்கஜனும், ஈ.பி.டி.பியில் இருந்து டக்ளஸ் தேவானந்தாவும் நாடாளுமன்றம் தெரிவாகியுள்ளனர். ஆக எமது அணிக்கு இரு ஆசனங்கள் கிடைத்துள்ளன.

2

## மகளைத் தேடிய தாய் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஓக. 11

இறுதிப் போரின் போது காணாமல் ஆக்கப்பட்ட மகளை தேடிவந்த தாய் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். முல்லைத்தீவு, விசுவமடுவைச் சேர்ந்த மைக்கல் யேசுமேரி (வயது74) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

2

## வவுனியா விபத்தில் முதியவர் பரிதாபச் சாவு

வவுனியா, ஓக. 11

வவுனியாவில் இன்று மதியம் இடம்பெற்ற விபத்தில் முதியவர் உயிரிழந்துள்ளார். வவுனியா புதிய பஸ் நிலையப்பகுதியினுள் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. பஸ் நிலையத்தில் நின்ற இலங்கை போக்குவரத்து சபையின் மாகோ சாலைக்குச் சொந்தமான பஸ் பின்நோக்கி இயக்கப்பட்டபோது முதியவரை மோதித் தள்ளியது. விபத்தில் முதியவர் படுகாயமடைந்தார். அவர்

2



## உத்தியோகபூர்வமாக காணி ஒப்படைப்பு

வலி.வடக்கு, ஓக. 11

1990ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முன்னர் காங்கேசன்துறை பொலிஸ் நிலையம் இயங்கிய, பொலிஸ் திணைக்களத்துக்குச் சொந்தமான காணி ஒழுங்கமைக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக பொலிஸாரிடம் இன்று காலை கையளிக்கப்பட்டுள்ளது.

2

## 19ஐ நீக்கினாலும் ஜனாதிபதியின் பதவி காலத்தில் மாற்றம் வராது!

கொழும்பு, ஓக. 11

அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்பட்டாலும் ஜனாதிபதியின் பதவிக்காலம் நீடிக்கப்படமாட்டாது என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநரான முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: புதிய அரசமைப்பை

2




## மருத்துவர் பற்றாக்குறையை நீக்குங்கள்!

*முல்லைத்தீவில் போராட்டம்*

முல்லைத்தீவு, ஓக. 11

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் நிலவும் மருத்துவர்கள் பற்றாக்குறையை நீக்கக் கோரி மாவட்ட அரச மருத்துவ அதிகாரிகள் அடையாள பணிப் புறக்கணிப்பை இன்று மேற்கொண்டனர். முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு மிக நீண்ட நாள்களாக நிலவி வரும் மருத்துவர் பற்றாக்குறையை போக்கக் கோரி உரிய அதிகாரிகளிடம் பல தடவைகள் கோரியும் சாதகமான பதில் எதுவும் கிடைக்கப் பெறாத நிலையில் மாவட்ட மருத்துவமனை மருத்துவர்கள் காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்தனர். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உள்ளக பயிற்சியை நிறைவு செய்து நியமனத்துக்காக காத்திருக்

2

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

# தமிழ்க் கூட்டமைப்பினர்...

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநரான பஸில் ராஜபக்ச. சிங்கள தொலைக்காட்சியொன்றில் நேற்று இரவு ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்து வெளியிடுகையி லேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நிபந்தனை அடிப்படையில் எம்முடன் அரசியல் நடத்த முடியாது. கூட்டமைப்பின் நிபந்தனைகளையும் ஏற்கமாட்டோம். யாழ்ப்பா ணத்துக்கு 24 மணிநேரமும் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. யாழ். தேவியை ராஜபக்ஷ அரசாங்கமே தலைமன்னார்வரை கொண்டு சென்றது. ஆனாலும் ஐக்கிய தேசியக் கட்சியையே கூட்டமைப்பு ஆதரித்தது. ஐ. தே.க. ஆட்சியை பாதுகாத்தது. வரவு - செலவுத் திட்டங்களுக்கு ஆதரவு வழங்கியது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் அல்லர்.
கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்டுள்ள சமஷ்டி உள்ளிட்ட கோரிக்கைகளை ஏற்கமுடி யாது. அவர்களுடன் பேச்சு நடத்தவேண்டிய தேவையும் எழவில்லை. வடக்குக்கு மாகாண சபையை வழங்கினோம். அதன் ஊடாக பயன்பெறவில்லை. முதல்தடவையாக கிழக்கு மாகாணசபைத் தேர்தலில்கூட போட்டியிட வில்லை. அடுத்த முறை நாம் நிச்சயம் கிழக்கு மாகாணத்தைக் கைப்பற்றுவோம்.
கூட்டமைப்பு ஊடாக அல்ல வடக்கு, கிழக் கில் எம்மால் தனித்து இயங்கி மக்களின் தேவைகளை பூர்த்திசெய்துகொள்ளமுடியும், என்றார். (ஒ,5,44)

## புதினம் தெரியுமோ?

**கருத்துக்கு கட்சிக்குள்ளும் ஆதர வில்லை. வெளியிலும் ஆதர வில்லை. கடைசியில் வேறு வித மாக இந்தக் கருத்துருவாக்கத் தைச் செய்வதற்கு 'சூனா சீனாக்' கூட் டணி தொடங்கி விட்டது. புத்திஜீவிகள், பொது அமைப்புக் களை நேரில் சந்திக்கும் 'சீனா' தலைவருக்கு வயதாகிவிட்டது. தலைமையை இளம் தலைமுறை யிடம் கையளிக்க வேண்டும். என்னிடம் ஒப்படைத்தால் சிறப்பாக இருக்கும் என்று அறிக்கை விடு மாறு கெஞ்சுகின்றாராம். கடந்த இரண்டு நாள்களாக இதுதான் நடந்து கொண்டிருக்கின்றது. கட்சியை இழி நிலைக்கு கொண்டு வந்தது போதாதென்று, கட்சி யையே இல்லாதொழிக்கத்தான் 'சூனா சீனா' கூட்டணி வழி தேடுகின்றது.**

பட்சி

## 19ஐ நீக்கினாலும்...

உருவாக்குவதற்கு நாட்டு மக்களின் அனுமதி கிடைத்துள்ளது. மக்களின் ஒத்துழைப்புடன் அதற்கான பணிகள் சுயாதீனமாக இடம்பெறும். அதற்கு முன்னர் அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்படும். ஏனெனில் அதில் பல குறைபாடுகள் உள்ளன.
19ஆவது திருத்தச்சட்டம் முன்வைக்கப்படுவதற்கு முன்னர் ஜனாதிபதியின் பதவிக் காலம் 6 வருடங்களாக இருந்தது. 19மூலம் அது ஐந்து வருடங்களாக குறைக்கப்பட்டது. 19ஐ நீக்கினால் பழைய நிலைமை திரும்பும். ஆனாலும் 5 வருடங்கள் பதவியில் இருப்பதற்குதான் மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். அதில் மாற்றம் செய்யக்கூடாது என ஜனாதிபதி அறிவித்துவிட்டார். எனவே, ஜனாதிபதியின் பதவிகாலம் நீடிக்கப்படாது.
அத்துடன், அரசமைப்பின் 18 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதி பதவியை நபரொருவர் இரண்டு தடவைகள் மாத்திரமே வகிக்கலாம் என்ற வரையறை மாற்றியமைக்கப்பட்டது. இதற்கு மக்கள் எதிர்ப்பை வெளியிட்டனர். எனவே, இரண்டு தடவைகள் என்ற நிலைமை உருவாக்கப்படும்- என்றார். (ஒ,5,44)

## மாற்று வியூகத்தால்...

இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுனர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
சிங்கள தொலைக்காட்சியொன்றில் நேற்று இரவு ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஜனாதிபதி தேர்தலின்போது வடக்கு, கிழக்கில் எமது அணிக்கு தோல்வி ஏற்பட்டது. அந்தத் தேர்தலின்போது கிடைத்த வாக்குகளை அடிப்ப டையாகக் கொண்டு கணிப்பிட்டால் பொதுத்தேர்தலில் எமது அணிக்கு 5 ஆசனங்களே கிடைத்திருக்கவேண்டும். ஆனால் அதனை விடவும் கூடுதல் ஆசனங்களை பொதுத்தேர்தலில் கைப்பற்றி யுள்ளோம். ஜனாதிபதி தேர்தலின்போது யாழில் கிடைத்த வாக்குகளை அடிப்படை யாகக் கொண்டால் பொதுத்தேர்தலில் எமது அணிக்கு ஓர் ஆசனம்கூட கிடைத்திருக்காது. எனவே, வியூகம் வகுக்கப்பட்டது. மாற்றுவழி குறித்து மதிநுட்பத்துடன் சிந்தித்தோம். இதன்படி சுதந்திரக் கட்சியில் இருந்து அங்கஜனும், ஈ.பி.டி.பியிலிருந்து டக்ளஸ் தேவா னந்தாவும் நாடாளுமன்றம் தெரிவாகியுள்ளனர். ஆக எமது அணிக்கு இரு ஆசனங்கள் கிடைத்துள்ளன.
அதேபோல் வன்னியிலும் இரண்டு ஆசனங்கள் உள்ளன. ஒருவர் மொட்டு சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர். மற்றையவர் ஈ.பி.டி.பி. வேட்பாளர். அடுத்ததாக மட்டக்களப்பு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஜனாதிபதி தேர்தல் பெறுபேறுகளின் அடிப்படை யில் எமக்கு ஓர் ஆசனமே கிடைத்திருக்கவேண்டும். ஆனால் இம்முறை இரண்டு ஆசனங்கள் கிடைத்தன. மொட்டு சின்னத்தில் போட்டியிட்ட வியாழேந்திரன் வெற்றிபெற்றார். பிள்ளையானும் 53 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்றார். சிறு வாக்கு வித்தியாசத்திலேயே அவரின் கட்சிக்கான தேசியப்பட்டியல் இல்லாமல்போனது.
அம்பாறை மாவட்டத்தையும் கைப்பற்றியுள்ளோம். மொட்டு சின்னத்தில் மூவரும், தேசிய காங்கிரஸின் அதாவுல்லாவும் வெற்றிபெற்றுள்ளனர். வடக்கு, கிழக்கில் சிலர் ராஜபக்சக்களை ஏதே னுமொரு காரணத்துக்காக எதிர்க்கின்றனர். மொட்டு சின்னத்தை விரும்பவில்லை. ஆனால் கூட்டமைப்பையும் அவர்கள் எதிர்க்கின்ற னர். அரசுடனும் இணையவேண்டிய தேவை உள்ளது. ஆனாலும் எம்முடன் உடனடியாக நேரில் இணையமுடியாது. இதன்கார ணமாகவே வேறு வழியில் வந்துள்ளனர். விரைவில் வடக்கு, கிழக்கு மக்களும் தேசிய கட்சிகளுடன் இணைந்து தேசிய நீரோட்டத்தில் சங்கமிப்பார்கள் என நம்புகின்றேன், -என்றார். (ஒ,5,44)





# கடமைகளை பொறுப்பேற்றார் பிரதமர் மஹிந்த

கொழும்பு,ஒக.12
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்ட, மஹிந்த ராஜபக் ஷ அலரி மாளிகையில் இன்று முற்பகல் கடமைகளைப் பொறுப் பேற்றார். அலரி மாளிகையில் அரச மரத்தடியில் சமய வழிபாட்டில் ஈடுபட்ட பிரதமர், பிரதான மண்டபத் தில் பிரித் பாராயணத்துடன் கடமைகளைப் பொறுப் பேற்றார். வித்யோதய பிரிவேனாதிபதி தலைமை சங்கநாயக்கர் கலாநிதி பலாங்கொட சோபித நாயக்க தேரர் உள்ளிட்ட தேரர்களால் வழிபாடு நடத்தப் பட்டது.
தொடர்ந்து இந்து, இஸ்லாமிய மற்றும் கத்தோலிக்க மத வழிபாடுகள் இடம்பெற்றன.
பொதுத் தேர்தலில் மகத்தான வெற்றியைப் பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக் ஷ இம்முறை பொதுத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டு 5 இலட்சத்து 27 ஆயி ரத்து 364 விருப்பு வாக்குகளைப் பெற்றார்.
நாட்டின் வரலாற்றில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் என்ற சாதனையை நிகழ்த்தி, நாடாளுமன் றுக்குத் தெரிவாகினார். 1970 ஆம் ஆண்டு இளைய நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட மஹிந்த, இரண்டு முறை ஜனாதிபதியாகவும், மூன்று முறை பிரதமராகவும் சேவையாற்றியுள் ளார். மஹிந்த 50 ஆண்டு கால அரசியல் வாழ்க்கையில், ஒன்பது பொதுத் தேர்தல் களிலும், மூன்று ஜனாதிபதித் தேர்தல்க ளிலும் போட்டியிட்டுள்ளார் என்று அவரது ஊடகப்பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## முன்னாள் போராளி...

காட்டு பகுதியில் அமைந்துள்ள தமிழ் நிலம் மக்கள் அமைப்பின் அலுவலகத் துக்குள் நேற்று இரவு உள்நுழைந்த இனந்தெரியாதோர் முன்னாள் போராளி மீது சரமாரியாக தாக்குதல் நடத்தியது டன் அலுவலகத்தில் இருந்த 50 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலி ஸார் குறிப்பிட்டனர்.
தாக்குதல் சம்பவம் தொடர்பில் அயல வர்களால் பொலிஸாருக்கு தகவல் தெரி விக்கப்பட்டது. காயமடைந்த முன்னாள் போராளி நோயாளர் காவு வண்டி மூலம் மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளார். (ஒ,5,110)

## உத்தியோகபூர்வமாக...

காங்கேசன்துறை மத்தி கிராம அலுவலர் பிரிவில் 1.14 ஏக்கர் காணியே தெல்லிப் பழை பிரதேச செயலரால் பொலிஸாரி டம் இன்று ஒப்படைக்கப்பட்டது. (ஒ,5)

## மகனைத் தேடிய...

இவருடைய மகன் 2009ஆம் ஆண்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தார். இன்று வரை கண்டு பிடிக்கப்படவில்லை.
காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சங்கத்தி னால் முன்னெடுக்கப்பட்ட சுழற்சி முறை தொடர் போராட்டங்களிலும் இந்த தாய் கலந்து கொண்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார். (ஒ,5)

## வவுனியா விபத்தில்...

முச்சக்கர வண்டியில் வவுனியா மருத்து வமனைக்கு கொண்டு செல்லப்பட் டார். அங்கு சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்துள்ளார். (ஒ,5,110)

## மருத்துவர் பற்றாக்குறையை...

கும் மருத்துவர்களை முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு விடுவிக்குமாறு சுகா தார சேவைகள் பணிப்பாளர் பணித்தும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர்களை விடுவிக்க வில்லை.
இதன் காரணமாக அடையாளப் பணிப்புறக் கணிப்பு இன்று முன்னெடுக்கப்பட்டுள் ளது. பணிப் புறக்கணிப்பு காரணமாக மருத்துவ மனைக்கு சென்ற நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். மாவட்ட மருத்துவமனையில் நிலவும் தொடர் மருத்துவ பற்றாக்குறை காரணமாக மாதாந்த சிகிச்சை பெறுபவர்கள் மற்றும் வெளிநோ யாளர்கள் என்று பெருமளவானவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர் எனத் தெரிவித்துள்ளார். (ஒ,5,19)






தலைமன்னார் புனித லோறன்சியார் ஆலயத் திருவிழா திருப்பலி கூட்டுத் திருப்பலியாக நேற்று திங்கட்கிழமை காலை 6.15 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது. இத் திருவிழா திருப்பலியில் தலைமன்னார் பங்குத்தந்தை அருட்பணி. அகஸ்ரின் புஸ்பராசா, தலைமன்னார் பங்கு மக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (ரி3-56)

# வாசனைத் திரவிய ஏற்றுமதியை அதிகரிக்க பேச்சுகள் ஆரம்பம்

கொழும்பு, ஒக.11

நாட்டில் வாசனைத் திரவிய ஏற்றுமதியை அதிகரிப்பதற்குத் தேவையான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதித் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் மக்கள் வங்கி அதிகாரிகள் வாசனைத் திரவிய உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தக சங்கத்தினர் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர்.

தன்னிறைவான நாட்டை உருவாக்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில், மக்கள் வங்கி கடன் திட்டத்தையும் தற்போது அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் விவசாயம், கடற்றொழில், பண்ணை வளர்ப்பு, சிறு நெல் ஆலைகள், பால் உற்பத்திப் பொருள்கள் உட்பட பல துறைகள் இதன் மூலம் பயன்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)




# விந்துலை பகுதியில் தீ விபத்து
# 24 குடியிருப்புகள் முற்றாக சேதம்

நுவரெலியா, ஒக.11

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பம்பரக் கலை மத்திய பிரிவில் நேற்று இரவு 10 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 24 தொழிலாளர் குடியிருப்புகள் முற்றாகத் தீக்கிரையாகியுள்ளன.

தீ விபத்து காரணமாக லயன் தொகுதியில் அமைந்திருந்த வீடுகள் முற்றாக சேதமடைந்ததுடன் இந்த வீடுகளில் குடியிருந்த 24 குடும்பங்களைச் சேர்ந்த 70 பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையம், அவர்களின் உறவினர் மற்றும் அயலவர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நிவாரண உதவிகளை தோட்ட நிர்வாகம் மற்றும் அக்கரைப் பந்தனை பிரதேச சபை ஆகியன இணைந்து வழங்கியுள்ளன.

லிந்துலை பொலிஸார் மற்றும் பொதுமக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்ததுடன், சுமார் 3 மணித்தியாலத்தின் பிறகு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்தீவிபத்தில் எவ்வித உயிர் ஆபத்தோ, காயங்களோ ஏற்படாத போதிலும் உடைமைகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளன.

இந்த தீ விபத்து மின்சார ஒழுக்கு காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ள லிந்துலை பொலிஸார், இது தொடர்பான விசாரணைகளை நுவரெலியா பொலிஸ் கைரேகை அடையாளப்பிரிவுடன் இணைந்து மேற்கொண்டு



# டிராக்டர் விபத்தில் சிறுமி உயிரிழப்பு

அக்கரைப்பற்று, ஒக.11

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆளங்குளம் வீதியில், உழவு இயந்திரம் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மாலை 5.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. 8 வயதுச் சிறுமி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

உழவு இயந்திரம் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என தெரிவருகின்றது.

விபத்தில் சாரதி மற்றும் அதில் பயணித்த சிறுமிகள் இருவர் காயங்களுக்குள்ளாகி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் அக்கரைப்பற்று பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ரி2)

# வாகன விபத்தில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக.11

தொம்பே சமனபெத்த பிரதான வீதியின் மல்வானை பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். மல்வானை பகுதியிலிருந்து வந்த கார் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து எதிரில் வந்த உந்துருளி ஒன்றுடன் மோதுண்டமையினால் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 42 வயதுடைய தாயும் 19 வயதுடைய அவரின் மகளுமே உயிரிழந்துள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய கார்ச் சாரதி கைது செய் யப்பட்டுள்ளார். (ரி1)

# தனிமைப்படுத்தலை நிறைவுசெய்த 118 பேர் சொந்த இடங்களுக்கு

கொழும்பு, ஒக.11

தனிமைப்படுத்தலை நிறைவு செய்த மேலும் 118 பேர் இன்று தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்து, அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

அதன்படி கல்கந்தை தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து 112 பேரும், மீயாங்குளம் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து நால்வரும், புனானை தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து இருவரும் வெளியேற்றப்படவுள்ளனர்.

இதேவேளை, தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து இதுவரை 29,757 பேர் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்து வெளியேறியுள்ளனர் என்றும், இராணுவத்தினரால் பராமரிக்கப்பட்டு வரும் 39 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 3,449 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (ரி3)

பொலிஸ் திணைக்களம் அறிமுகம் செய்த

# துரித தொலைபேசி இலக்கங்களுக்கு இதுவரை 1805 அழைப்புக்கள்

கொழும்பு, ஓக.11

பொலிஸ் திணைக்களத்தால் அறிமுகம் செய்யப்பட்ட துரித தொலைபேசி இலக்கங்களுக்கு இதுவரை 1805 அழைப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கப்பம் பெறல், போதைப்பொருள் கடத்தல், பெரும் ஊழல் மற்றும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய இரகசிய தகவல்களை வழங்க அறிமுகம் செய்யப்பட்ட 1997 என்ற துரித தொலைபேசி இலக்கத்துக்கு 1527 அழைப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதேவேளை குற்றச் செயல்களில் ஈடுபடுவோர், போதைப்பொருள் கடத்தலால் திரட்டப்படும் சொத்துக்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தகவல் வழங்க அறிமுகம் செய்யப்பட்ட 1917 என்ற துரித இலக்கத்துக்கு 278 அழைப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.



கிடைக்கப் பெற்ற அழைப்புக்களில் கிடைத்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 66 தகவல்கள் வெற்றிகரமான சுற்றிவளைப்புக்களுக்கு உதவியுள்ளதுடன் அதில் 14 சுற்றிவளைப்புக்கள் மேல் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யுமளவுக்கு பெரிய சுற்றிவளைப்புக்களாக அமைந்துள்ளன. மேலும் 38 சம்பவங்கள் தொடர்பில் அவற்றுக்கென நியமிக்கப்பட்ட விசேட பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.ஏனைய 240 அழைப்புக்கள் ஊடாக கொடுக்கப்பட்ட தகவல்களும், சி.ஐ.டி.யின் குறித்த விடயப் பரப்புக்குள் உள்ளடங்காத நிலையில் அவை, பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப்பிரிவு மற்றும் ஏனைய பொலிஸ் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. எனத் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் ஜூலை 27 ஆம் திகதி குற்றச் செயல்கள் உள்ளிட்ட இரகசியத் தகவல்களை வழங்குவதற்காக 1997, 1917 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் பொலிஸ் திணைக்களத்தால் அறிமுகம் செய்யப்பட்டன. இந்நிலையில் 1997 என்ற துரித தொலைபேசி இலக்கம் பிரத்தியேக தனியான பொலிஸ் குழுவால் கையாளப்பட்டு வருகின்றது. இது பொலிஸ் உளவுப் பிரிவான பொலிஸ் விசேட நடவடிக்கை பிரிவில் மிக இரகசியமாக இயங்கும் குழுவொன்றினால் கையாளப்பட்டு வருகின்றது. என்பது குறிப்பிடத்தக்கது. (ரி3)

## சனிக்கிழமை முதல் கைதிகளை பார்வையிட அனுமதி

கொழும்பு, ஓக.11

எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை முதல் கைதிகளைப் பார்வையிடுவதற்கு பார்வையாளர்களை அனுமதிக்க சிறைச்சாலை திணைக்களம் முடிவுசெய்துள்ளது.

கடுமையான சுகாதார வழிகாட்டல்கள் மற்றும் நிபந்தனைகளின் கீழ், கைதிகளின் நெருங்கிய உறவினருக்கு மாத்திரமே கைதிகளைப் பார்வையிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், ஒரு கைதியைப் பார்வையிடுவதற்கு வாரத்திற்கு ஒரு முறை மட்டுமே உறவினர் அனுமதிக்கப்படுவர். உறவினர்கள் கைதிகளுக்கு உணவு மற்றும் பானங்களை வழங்க முடியாது, அதேநேரத்தில் சுகாதாரப் பொருள்களை மட்டும் வழங்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் வெலிக்கடைச் சிறைச்சாலை கைதி ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டதை அடுத்து நாட்டின் அனைத்து சிறைச்சாலைகளிலும் கைதிகளைப் பார்வையிடும் நடவடிக்கை மறு அறிவித்தல் வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

## இலங்கை– மியன்மார் நேரடி விமான சேவை

### சாத்தியக்கூறுகளை ஆராய இணக்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.11

இலங்கைக்கும், மியன்மாருக்கும் இடையில் நேரடி விமான சேவை இணைப்பை ஏற்படுத்துவதற்கான நோக்கத்துடன் மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் நளின் டி சில்வா மியான்மர் எயர்வேஸ் இன்டர்நேஷனலின் உயர் நிர்வா கத்துடன் அண்மையில் ஒரு சந்திப்பை நடத்தியுள்ளார். இதன்மூலம் இரு இடங்களிலும் சுற்றுலாத் தொழில்களை மேம்படுத்த முடியும் எனவும், இரு நாடுகளுக்கும் இடையிலான பயணிகளின் நேர விரயத்தைக் குறைக்க முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வரலாற்று, கலாசார, மத உறவுகளால் ஆதரிக்கப்படும் இந்த இரண்டு நாடுகளுக்குமிடையில் கணிசமான அளவு போக்குவரத்துச் சேவை இதனால் நடைபெறுமென மியன்மாருக்கான இலங்கையின் தூதுவர் இதன்போது கூறியுள்ளார்.

இரு நாடுகளின் மத முக்கியத்துவத்திலிருந்து பொருளாதார நன்மைகளைப் பெறும் நோக்கில் கொழும்பு யங்கூன் புத்தகாயா அல்லது கொழும்பு யங்கூன் - காத்மண்டு ஆகிய வற்றை இணைக்கக்கூடிய ஒரு விமான சேவையை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயவுள்ளோம் எனவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இக் கலந்துரையாடலில் மியன்மார் எயார்வேஸ் இன்டர்நேஷனலை பிரதிநிதித்துவப்ப டுத்திய தலைமை நிர்வாக அதிகாரி சரவணன் ராமசாமி மற்றும் தலைமை வணிக அதிகாரி குமார் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ரி3)



## நாட்டின் புதிய அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை கிடைத்துள்ளது

### பௌத்த பீடங்களின் மஹாசங்கத்தினர் ஆசீர்வதிப்பு

கொழும்பு, ஓக.11

ஜனாதிபதியும், பிரதமரும் எதிர்பார்த்தபடி அவர்களுக்கு நாட்டு மக்களின் ஆணை கிடைத்துள்ளது என மூன்று பௌத்த பீடங்களின் மஹாசங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற இலங்கையின் புதிய அரசாங்கத்திற்கு ஆசி வழங்கி அமரபுர, அஸ்கிரிய, ராமன்ய ஆகிய பௌத்த பீடங்களின் பௌத்த பிக்குகள் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாட்டின் இறையாண்மைக்காக மக்கள் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆணையை வழங்கியுள்ளனர். அறிவு, உளவுத்துறை மற்றும் ஒருமைப்பாடு உள்ளவர்கள் நாடாளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அவசியம் தேர்தல் பிரசாரத்தின் போது ஒவ்வொரு அரசியல் கட்டத்திலும் பேசப்பட்டது. ஜனாதிபதியினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டம் நிறைவேறும் என்ற எதிர்பார்ப்புடன் ஜனாதிபதியும், பிரதமரும் எதிர்பார்த்தபடி அவர்களுக்கு நாட்டு மக்களின் ஆணை கிடைத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஓக.11

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட போர் 12 ரக ரவைகளை பயன்படுத்தக் கூடிய வகையிலான துப்பாக்கியுடன் நபர் ஒருவர் நேற்றிரவு பெலியத்த பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். ஹம்பாந்தோட்டை காணி ஆணையாளர் அலுவலகத்தில் சாரதியாக கடமையாற்றும் நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். தம்முல்லவீரகெட்டிய வீதியில் அமைந்துள்ள அவரின் வீட்டின் மேல் மாடியில் உள்ள படுக்கை அறையில் துப்பாக்கி மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட நபர், கடந்த 2ஆம் திகதி வீட்டின் முற்றத்தை சுத்தம் செய்து கொண்டிருக்கும் போது துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்காகி உயிரிழந்த தேவி சாவித்ரி சதரசிங்க என்ற பெண்ணின் கணவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி1)

## சர்வதேச விண்வெளி நிலையத்தை இன்று வெற்றுக் கண்ணால் பார்க்கலாம்

கொழும்பு, ஓக.11

சர்வதேச விண்வெளி நிலையத்தை வெற்றுக் கண்களால் பார்ப்பதற்கு இலங்கை மக்களுக்கு இன்று சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. வானம் தெளிவாக இருந்தால், சர்வதேச விண்வெளி நிலையத்தை வெற்றுக் கண்களால் இன்றிரவு அவதானிக்க முடியும். இது வானில் நிலைகொண்டுள்ள, மூன்றாவது பிரகாசமான பொருள் என்பதுடன் ஒரு மணி நேரத்திற்கு ஆயிரக்கணக்கான மைல்கள் வேகத்தில் பயணம் செய்யும். இதனை அவதானிக்கும் வாய்ப்பானது இன்றிரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகி, அடிவானத்திற்கு கீழே கடப்பதற்கு முன் அதிகபட்சம் 3 நிமிடங்கள் தெரியும். இது வடமேற்கு திசையில் 29 பாகைக்கு தோன்றி தென்கிழக்கு மேலே 33 பாகையில் மறைந்துவிடும். (ரி1)

# அதிகரிக்கும் முட்டை விலையால் பேக்கரி உற்பத்தியாளர் பாதிப்பு

கொழும்பு, ஒக.11

சந்தையில் முட்டை விலை தொடர்ந்து அதிகரித்து செல்வதன் காரணமாக சிரமங்களுக்கு முகங் கொடுத்து வருகின்றனர் என பேக்கரி உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். சந்தையில் முட்டையொன் றின் விலை 22 ரூபாவாக உள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பேக்கரி உற்பத்திக்காக அதிளவான முட்டைகள் பயன்படுத்தப்படுவதன் காரணமாக சந்தையில் முட்டைக்கான நிர்ணய விலையொன்றை அறிவிக்க வேண்டுமெனவும் அகில இலங்கை பேக்கரிகள் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் என்.கே.ஜயவர்தன கேட்டுக்கொண்டுள்ளார். (ரி1)



## தம்பலகாமம் வைத்தியசாலையில் உளநலப் பிரிவு திறந்து வைப்பு

திருகோணமலை, ஒக.11

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையில், உள நலப்பிரிவு உத்தியோகபூர்வமாக இன்று திறந்துவைக்கப்பட்டது.

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வீ. பிரேமானந் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. தம்பலகாமம் பிரதேசத்திலுள்ள சுமார் 75 நோயாளர்கள் மாதாந் தம் கிண்ணியா தள வைத்தியசாலையின் உளநல வைத்தியரின் உதவியுடன், தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், விசேட வைத்திய நிபுணரின் ஆலோசனை தேவைப்படும் பொழுது, திருகோணமலை பொது வைத்தியசாலை அல்லது கந்தளாய் தள வைத்தியசாலையை நாடவேண்டியுள்ளதாகவும் இதனால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டு, கந்தளாய் தள வைத்தியசாலையின் உளநல வைத்திய நிபுணர் சுயானி சிறிவர்த்தன, தன்னுடைய சேவையை மாதாந்தம் தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையில் நடத்துவதற்கு முன்வந்துள்ளார். இதன் மூலம் இதுவரை சிகிச்சை பெற்று வந்த இப் பிரதேச நோயாளர்கள் பயன்பெறுவதோடு, புதிதாக அடையாளம் காணப்பட்டு சிகிச்சை பெறாமல் இருப்பவர்களுக்கும் இது ஒரு வரப்பிரசாதமாக அமையும் எனவும் தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி எஸ். ஜீவராஜ் தெரிவித்துள்ளார். (ரி2)

## கடற்படையினரால் கரையோரங்கள் சுத்தம்



கொழும்பு, ஒக.12

தீவைச் சுற்றியுள்ள கரையோரப் பகுதியை மாசு இல்லாத மண்டலமாக பராமரிக்க கடற்படை பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. அதன்படி வடக்கு மற்றும் தெற்கு பகுதிக் கடற்கரைகள் கடற்படையினரால் சுத்தம் செய்யப்பட்டன.

வடக்குக் கடற்படையினர் யாழ்ப்பாணத் தீபகற்பம் மற்றும் கடலோரப் பகுதிகளைச் சுத்தமாக்கும் நோக்கத்தில், காங்கேசன்துறை துறைமுகம், கோவளம், பள்ளிக்குடா, சில்லாலெய் மற்றும் கட்டைகாடு ஆகிய கடற்கரைப் பகுதிகளைச் சுத்தம் செய்தனர். அங்கு அவர்கள் ஏராளமான பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன்களை அகற்றினர்.

இதேபோன்று தெற்கு கடற்படை வீரர்களும் காலி, தெவட்ட, தங்காலை, கொயம்பொக்க மற்றும் ஹம்பாந்தோட்டை மீன்வளத் துறை முகங்களில் சேகரிக்கப்பட்ட குப்பைக் குவியல்களைச் சுத்தம் செய்ய நடவடிக்கை எடுத்தனர்.

மேலும், கொவிட் 19 தொற்று பரவாமல் தடுக்க வழங்கப்பட்ட அனைத்து சுகாதார நடைமுறைகளுக்கும் ஏற்ப, கரையோரத் தூய்மைப்படுத்தும் திட்டங்கள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி2)



## கற்றல் இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு

கரணவாய், ஒக.11

வடமராட்சி கல்வி வலயத்தின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கற்கை நிலையத்தால் மாணவரின் நலன் கருதி தயாரிக்கப்பட்டகற்றல் இறுவட்டு இன்று வெளியிட்டு வைக்கப்பட்டது. வலயக்கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் தலைமையில் வலய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப்பணிப்பாளர் சி.உதயகுமார் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச செயலர் ஈ.தயாரூபன், பருத்தித்துறை பிரதேசசெயலர் ஆ.ஸ்ரீ மருதங்கேணிப் பிரதேச செயலர் கே.பிரபாகரமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். இறுவட்டின் வெளியீட்டுரையை யாழ் பல்கலைக்கழக கல்வியியற்றுறை விரிவுரையாளர் ஐ.விஜயபாஸ்கரன் நிகழ்த்தினார். இறுவட்டை வலயக்கல்விப்பணிப்பாளர் வெளியிட்டு வைக்க பிரதம விருந்தினர் பெற்றுக்கொண்டார். (ரி1-108)

## நிறுத்தப்பட்ட அபிவிருத்தி வேலைகள் மீள ஆரம்பம்



மட்டக்களப்பு, ஒக.11

தேர்தல் காலம் காரணமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு மாநகர சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் அனைத்தும் இன்று மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சப்பிரிகம திட்டத்தின் மூலமாக நடைபெறும் பூநொச்சிமுனை மதகு வேலைத்திட்டம், கல்லடி போக்கடிவீதி வடிகான் அமைப்பு மற்றும் வீதி புனரமைப்பு, கல்லடி எட்டாம் குறுக்கு வடிகான் அமைப்பு, புதூர் திமிலைதீவு வீதி புனரமைப்பு ஆகிய வேலைத்திட்டங்களை மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் நேரில் பார்வையிட்டார். அதன் பின் கருத்துத் தெரிவித்த அவர், தேர்தல் காலம் காரணமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு மாநகர சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் அனைத்தும் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சப்பிரிகம திட்டத்தின் மூலமாக நடைபெறும் அபிவிருத்தி வேலைகளை நேரில் சென்று பார்வையிடப்பட்டது. மண் வீதி இல்லாத மாநகரத்தை நோக்கி எனும் திட்டத்தை ஆரம்பிக்க இருப்பதுடன். அதன் மூலம் கிராமங்களில் இருக்கின்ற மண் வீதிகளை முதல் கட்டமாக கிரவல் வீதிகளாக அபிவிருத்தி செய்வதற்கு இருக்கின்றோம். மட்டக்களப்பு நூலகமானது அதன் கட்டுமான செயற்பாடுகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தாலும் அதனை அபிவிருத்தி செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் முடிக்கப்பட்ட நிலையில் தேர்தலுக்கு முன்பாக அமைச்சரவை கொள்முதல் குழு அதனை அங்கீகரித்துள்ளது. அதனால் மிக விரைவில் அது ஆரம்பிக்கப்படவுள்ளது. அதேபோல் மாநகரசபை ஆரம்பித்து இருக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியினுடைய 1800 மில்லியன் செலவிலான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன எனத் தெரிவித்தார். (ரி1)



உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் புதிய அதிபராக சுப்பிரமணிய குருக்கள் ராஜலக்சுமி நேற்று முன்தினம் தனது பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளார். இக் கல்லூரியின் அதிபராக இருந்த கௌரி சேதுராசா ஓய்வுபெற்றுச் சென்று நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் வல்வை மகளிர் கல்லூரியின் அதிபராக இருந்த செல்வி சுப்பிரமணியக்குருக்கள் இக் கல்லூரியின் அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். (ரி3-108)

# மெழுகுவர்த்தி விற்பனை வீழ்ச்சி

## உதவுமாறு உற்பத்தியாளர் கோரிக்கை

மன்னார், ஒக.11

மடுப்பிரதேசத்துக்கு உட்பட்ட பெரிய பண்டிவிரிச்சான் பகுதியில் சுயதொழில் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற மெழுகுவர்த்திகளை, விற்பனை செய்ய உதவுமாறு மெழுகுவர்த்தி உற்பத்தியாளரான செல்லையா ரத்தினம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெளியிடங்களிலிருந்து வரும் மெழுகு வியாபாரிகளினால் பெரிய பண்டிவிரிச்சான் பகுதியில் சுயதொழில் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற மெழுகுவர்த்திகளின் உற்பத்தி நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன என சுயதொழில் முயற்சியாளர் மேலும் கவலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

பெரிய பண்டிவிரிச்சான் கிராமத்தில் வாழ்வாதாரத்துக்காக கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக சிறிய அச்சின் மூலம் மெழுகுவர்த்திகளை உற்பத்தி செய்து பொலித்தீன் பைகளில் போட்டு உந்துருளியின் மூலம் மன்னார் மாவட்டம் முழுவதும் சென்று வியாபாரம் செய்தேன்.

தற்போது, பல சிரமங்களுக்கு மத்தியில் பிரதேச செயலகத்தில் பதிவு செய்து மெழுகுவர்த்திகளை வியாபார தரத்துடன் பொதி செய்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறேன்.

மெழுகுத் தட்டுப்பாடுகள் ஒருபுறம் இருந்தாலும் தென்னிலங்கை மற்றும் பெரிய வியாபாரிகள் கிராமப்புறங்களில் உள்ள கடைகளுக்கு நேரில் சென்று நீண்டகால கடனடிப்படையில் மெழுகுவர்த்திகளை விற்பனை செய்துவருகின்றனர். மாவட்டத்தில் உள்ள பெரிய மற்றும் சிறிய வியாபாரிகள் வெளியிடத்து வியாபாரிகளிடமே மெழுகுதிரிகளைப் பெறுகின்றார்கள். இதனால் எனது சிறு கைத்தொழில் வியாபாரம் மற்றும் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகிறது.

எனவே மன்னார் மாவட்டத்தில் உள்ள பெரிய மற்றும் சிறிய வியாபார நிலைய உரிமையாளர்கள் உள்ளூர் உற்பத்தி மற்றும் சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காகவும் அவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டும் எமது உள்ளூர் தயாரிப்பான மெழுகுதிரிகளை கொள்வனவு செய்து எமது சுயதொழில் முயற்சி வெற்றி பெற உதவி செய்ய வேண்டும் - என்றார். (ரி2-213)

# இலங்கைத் தமிழும் தமிழரும் ஆய்வரங்கில் நாளை

யாழ்ப்பாணம், ஒக.11

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தமிழ்நாடு மதுரை உலகத் தமிழ்ச்சங்கமும் இணைந்து சூம்(Zoom) செயலி வாயிலாக 20 நாள்களுக்கு இலங்கையில் தமிழும் தமிழரும் என்ற பொருளில் இணையவழியில் ஆய்வு மாநாட்டை முன்னெடுத்து வருகின்றன.

இதன் பதின்மூன்றாவது நாளாகிய நாளை புதன்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை யாழ்ப்பாணம் நாட்டிய கலாகேந்திராவின் இயக்குநர் கலாநிதி கிருசாந்தி இரவீந்திரா "இலங் கைத் தமிழர் ஆடல் கலை மரபு" என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றவுள்ளார்.

இணையவழியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் பின்வரும் கடவுச்சொல்லைப் பயன்படுத்திக் கலந்து பயன்பெற முடியும் எனத் தமிழ்ச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ரி3)

Zoom meeting ID : 477 159 8996
pass word : wts

# கைத்துப்பாக்கிகள் பறிமுதல்

கொழும்பு, ஒக.11

மத்துகம, யடடொல பகுதியில் இரு நபர்களிடமிருந்து கைத்துப்பாக்கிகள் இரண்டு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இதன்போது ஐந்து தோட்டாக்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என மேல் மாகாண பொலிஸ் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மத்துகம பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே இத் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இத் துப்பாக்கிகளில் ஒன்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குச் சொந்தமானது என மத்துகம பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. (ரி1)

# தண்ணீர் பற்றாக்குறையில் உலகில் 400 கோடி மக்கள்

## ஐ.நா. சபை தகவல்

ஜெனிவா, ஒக.11

உலகம் முழுவதும் சுமார் 400 கோடி மக்கள் ஆண்டுக்கு ஒரு மாதமாவது தண்ணீர் பற்றாக்குறையைச் சந்தித்து வருகின்றனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, உலக நாடுகள் கொரோனாவைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில் உலகம் முழுவதும் 5இல் 2 பேர் தண்ணீர் பற்றாக்குறையைச் சந்தித்து வருகின்றனர். 300 கோடி மக்கள் தங்கள் வீடுகளில் தண்ணீர் இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர். 400 கோடி மக்கள் வருடந்தோறும் ஒரு மாதத்திலாவது கடுமையான தண்ணீர் பற்றாக்குறையைச் சந்திக்கின்றனர். கோடிக்கணக்கான மக்கள் நீர் மற்றும் சுகாதார வாசதிகள் இல்லாமல் இருப்பது மிகப் பெரிய பேரழிவு எனத் தெரிவித்துள்ளது. (ரி1)

# சுற்றுலா விடுதியில் 18 மான் கொம்புகள்

## முகாமையாளர் கைது

நுவரெலியா,ஒக.11

நுவரெலியாவில் உள்ள சுற்றுலா விடுதியொன்றில் 18 மான் கொம்புகளுடன் சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பகுதியில் மானின் இரண்டு கால்கள், ஏராளமான சிப்பிகள் மற்றும் மலைப் பாம்பு என்பனவும் காணப்பட்டன என நுவரெலிய வன விலங்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதையடுத்து சுற்றுலா விடுதியின் முகாமையாளர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். (ரி1)

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை

கொழும்பு, ஒக.11

நிட்டம்புவ எகொடவத்த பொகோடகம பிரதேசத்தில் தொடகடவெல வயல் நிலத்திற்கு அருகே ஒருவர் கூரிய ஆயுதத்தினால் தாக்கி கொலை செய்யப்பட்டுள்ளார். இரு குழுக்களுக்கு இடையே நேற்றிரவு ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த கொலை இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்த நபரின் சடலம் வயல் நிலத்திற்கு அருகில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளதுடன், சம்பவத்துடன் தொடர்புடைய எந்தவொரு சந்தேக நபரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை. (ரி1)

# அனர்த்த முகாமைத் தரத்தை உயர்த்த அமெ. அர்ப்பணிப்புடன் செயற்படும்

## இலங்கைக்கான அமெரிக்கா தூதுவர் எலையன்னா பி டெப்லிட்ஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஒக.11

எதிர்வரும் வருடங்களில் இலங்கையின் அனர்த்த முகாமைத் தரத்தை உயர்த்த அமெரிக்கா அர்ப்பணிப்புடன் செயற்படும் என்று அமெரிக்க தூதுவர் எலையன்னா பி டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

இதன் ஒரு கட்டமாக அமெரிக்க அரசாங்கத்தின் உதவி நிறுவனமான யு.எஸ்.எய்ட், சர்வோதய சிரமதான அமைப்புக்கு 1.5 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது.

இதன் மூலம் உள்ளூர் சமூக அபிவிருத்தியை சர்வதேச நிவாரண நிறுவனங்கள் ஊடாக அடுத்த இரண்டு வருடங்களுக்கு மேம்படுத்தும் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.



அத்துடன், அண்மையில் அமெரிக்க அரசாங்கம் இலங்கையின் அனர்த்த முகாமை தரத்தை மேம்படுத்தும் வகையில் ஐக்கிய நாடுகளின் உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்துக்கு 550,000 டொலர்களை வழங்கியுள்ளதுடன், கடந்த ஜூன் மாதத்தில் அமெரிக்கா பருவப் பெயர்ச்சிக் காலத்துக்கான முன்னேற்பாடுகளுக்காக 2400 தண்ணீர்த் தாங்கிகளை வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ரி3)

# தே.அ.அட்டைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க கோரிக்கை

கொழும்பு, ஒக.11

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டை விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு ஆள் பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது. பாடசாலை அதிபர்கள் ஊடாக குறித்த விண்ணப்பப்படிவங்களை முழுமையாகப் பூர்த்தி செய்து விரைவில் சமர்ப்பிக்குமாறு ஆள்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க கேட்டுக் கொண்டுள்ளார். (ரி1)

## ஏக்கம்...



அண்மையில் லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் இடம்பெற்ற வெடிவிபத்தில் சேத மடைந்த தனது வீட்டை ஏக்கத்துடன் பார்வையிடும் பெண்.



# கேரளா நிலச்சரிவு; சாவு 49 ஆக அதிகரிப்பு!

### 31பேர்ஒரேகுடும்பத்தைச்சேர்ந்தவர்கள்

*புதுடில்லி, ஓக.11*

கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில் உள்ள ராஜமலை பகுதியில் கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோரின் எண் ணிக்கை 49 ஆக உயர்வடைந்துள்ளது.

கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில் உள்ள ராஜமலை பெட்டிமுடி கன்னண் தேவன் தேயிலைத் தோட்டப் பகுதியில் வெள்ளிக்கி ழமை இரவு நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் சுமார் 20 வீடுகள் மண்ணில் புதைந்தன.

தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் 65க்கும் மேற்பட்டோரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. வீடுகளுடன் மண்ணுக் குள் புதையுண்டவர்களை மீட்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 200க்கும் மேற் பட்ட தேசிய பேரிடர் மீட்புப்படையினர் மீட்புப்பணி யில் ஈடுபட்டு வருகின்றனர். சனிக்கிழமை 17 பேர் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டனர்.

தொடர்ந்து நேற்று வரை நடைபெற்ற மீட்புப் பணிகளில், மேலும் பலர் சடலங்களாக மீட்கப் பட்டமையை அடுத்து உயிரிழந்தோரின் எண்ணிக்கை 43 ஆக உயர்ந்துள்ளது. மேலும் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களில் 31 பேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் மண்ணுக்குள் புதைந்தவர்களில் 19 பேர் மாணவர்கள் எனத் தெரியவந்துள்ளது. (ரி1)





# இந்துஆலயத்தில் நியூசிலாந்து பிரதமர் வழிபாடு

நியூசிலாந்தில் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள பிரதமர் பதவிக்கானத் தேர்தலை முன்னிட்டு கோயி லுக்குச் சென்று அந் நாட்டுப் பிரதமர் ஜெசிந்தா ஆர்டர்ன் வழிபாடு நடத்தியுள்ளார்.

நியூசிலாந்தில் கொரோனாத் தொற்றுப் பரவலை திறமை யாகச் செயற்பட்டு கட்டுப்படுத்திய அவரை அந் நாட்டு மக்கள் பாராட்டி வருகின்றனர். கடந்த 100 நாள்களில் நியூசிலாந்தில் புதிதாக ஒரு கொரோனாத் தொற்றாளர் கூட அடையாளம் காணப்படவில்லை என்பதும் குறிப்பி டத்தக்கது. (ரி1)





# பெய்ரூட் வெடிவிபத்தின்போது பிறந்த குழந்தை!

பெய்ரூட்டில் வெடி விபத்து நடந்தபோது மருத்து வமனையில் இருந்த கிறிஸ்டல் சவாயா என்பவருக்கு அழகான ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இதுதொடர்பான புகைப்படங்கள் வெளியாகி சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வருகின்றன.

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் உள்ள துறைமுகத்தில் நடந்த மிகவும் பயங்கரமான வெடிவிபத்து பலரையும் அதிர்ச்சியடைய வைத்தது. இந்த விபத்தில் 150க்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளனர் ஆயிரக்கணக்கான மக்கள் காயமடைந்துள்ளனர். இந்த விபத்து தொடர்பான வெளியாகும் புகைப்படங்கள் பலவும் கவலையை அளிக்கும் விதமாக உள்ளன. இந்த நிலையில் தற்போது பெய்ரூட் பகுதியில் உள்ள மருத்துவமனை ஒன்றில் இருந்து வெளியாகி இருக்கும் புகைப்படம் பலரையும் வேதனையடையச் செய்துள்ளது.

வெடிப்பு நடந்தபோது மருத்துவமனையில் இருந்த கிறிஸ்டல் சவாயா என்பவருக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. கண்ணாடிகள் உடைந்து சிதறிக்கிடக்கும் அறையின் நடுவே உருக்குலைந்து கிடக்கும் படுக்கையின் மீது கிறிஸ்டல் படுத்துள்ளார். படுக்கையிலும் கண்ணாடித் துண்டுகள் நிறைந்துள்ளன.

மற்றொரு புகைப்படத்தில், அவரின் கணவர் இரத்தக் கறைப் படிந்த ஆடையை அணிந்து முகத்தில் இரத்தக் காயங்களுடன் தன் குழந்தையை பாது காப்பாக அணைத்துக் கொண்டு காணப்படுகிறார்.

# ஸ்லிம்மாக மாறிய ஹன்சிகா!



ஹன்சிகா, அழகாக குண்டாக இருந்த வர். பிரபுதேவாவுடன் 'குலேபகாவலி' படத்தில் அவர் வந்த போது, 'ஹன்சிகாவா இது?' என்று ஆச்சரியப்படும் அளவுக்கு மெலிந் திருந்தார். தற்போது இன்னும் உடலைக் குறைத்து பயங்கர ஸ்லிம்மாக மாறிவிட்டார். அவருடைய 50வது படமான 'மஹா' படப்பிடிப்பு நிறைவடையும் நிலையில் உள்ளது. இதில் சிம்பு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இதைத் தொடர்ந்து, இயக்குநர் மித்ரன் ஜவஹர் இயக்கத்தில் தனுஷ் நடிக்கும் படத்திலும் ஹன்சிகாவை ஒப்பந்தம் செய்துள்ளனர்.

# கார்ப் பந்தயப் போட்டியில் நெதர்லாந்து வீரர் முதலிடம்

லண்டன், ஓக.11

பார்முலா1 கார்பந்தயத்தின் 5 ஆவது சுற்றுப் போட்டியில், நெதர்லாந்து வீரர் மேக்ஸ் வெர்ஸ்டப்பென் முதலிடம் பிடித்துள்ளார்.

இந்தப் போட்டி இங்கிலாந்தின் சில்வர்ஸ்டோன் ஓடுதளத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.



இந்தச் சுற்று, பார்முலா1 கார்பந்தயம் ஆரம்பிக்கப்பட்டு 70 ஆண்டுகள் முடிவடைவதைக் கொண்டாடும் வகையில் நடைபெற்றது. இந்தச் சுற்றில் வழக்கம் போல் 10 அணிகளைச் சேர்ந்த 20 வீரர்கள் காரில் சீறிப்பாய்ந்தனர். இதில் 306.198 கிலோமீற்றர் பந்தய தூரத்தை நெதர்லாந்து வீரர் மேக்ஸ் வெர்ஸ்டப்பென் (ரெட்புல் அணி) 1 மணி 19 நிமிடம் 41.9 வினாடிகளில் எட்டி முதலிடம் பிடித்ததோடு 25 புள்ளிகளையும் தட்டிச் சென்றார்.

இதன் மூலம் மெர்சிடஸ் அணியின் ஆதிக்கத்துக்கு முடிவு கட்டிய அவர், இந்தச் சுற்றில் முதல் வெற்றியை பதிவு செய்துள்ளார். அவரை விட 11.32 வினாடி பின்தங்கிய 6 முறை சம்பியனான இங்கிலாந்து வீரர் லீவிஸ் ஹாமில்டன் (மெர்சிடஸ் அணி) 2 ஆவதாக வந்து 19 புள்ளிகளைப் பெற்றார். பின்லாந்து வீரர் வால்டெரி போட்டோஸ் (மெர்சிடஸ் அணி) 3 ஆவது இடத்தைப் பிடித்தார்.

இதுவரை நடந்துள்ள 5 சுற்று போட்டிகளின் முடிவில் சம்பியன்ஷிப் பட்டத்துக்கான வாய்ப்பில் ஹாமில்டன் 107 புள்ளிகளுடன் முதலிடத்திலும், வெர்ஸ்டப்பென் 77 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்திலும் உள்ளனர். அடுத்த சுற்றுப் போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி ஸ்பெயினில் நடைபெறவுள்ளது. (ரி2)



## ரி-20 இல் வெற்றிக்கான வாய்ப்பு சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கே

புதுடில்லி, ஓக.11

ஐ.பி.எல் போட்டி என்றாலே சென்னை சூப்பர் கிங்ஸ் அல்லது மும்பை இந்தியன்ஸ் என்ற நிலையில், இந்த முறை சுப்பர் கிங்ஸ் அணிக்குச் சவாலாக வேறு எந்தவொரு அணியும் இருக்கப் போவதில்லை என்று பிரெட் லீ தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல் ரி-20 லீக் போட்டிகள் இதுவரை 12 தடவைகள் நடைபெற்றுள்ளன. இதில் ஏழு முறை சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் ஆகிய இரண்டு அணிகளும் தான் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளன.ஐ.பி.எல்லின் 13 ஆவது சீசன் போட்டி ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறவுள்ளது. ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் கிண்ணத்தை வெல்லும் அணி எது என்று எவரிடம் கேட்டாலும், சென்னை சூப்பர் கிங்ஸ் அல்லது மும்பை இந்தியன்ஸ் என்று தான் சொல்வார்கள்.

ஆனால் இந்த முறை சென்னை சூப்பர் கிங்ஸ் அணிதான் கிண்ணத்தை வெல்லும் என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரும், தற்போதைய கிரிக்கெட் வர்ணனையாளருமான பிரெட் லீ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பிரெட் லீ தெரிவித்ததாவது;

ஐக்கிய அரபு அமீரகத்தின் காலநிலை சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு சாதகமாக இருக்கும். இதனால் அந்த அணிக்குத் தான் வாய்ப்பு அதிகம். அணியின் பல வீரர்கள் முதிர்ச்சி அடைந்தவர்களாகவும், வயதானவர்களாகவும் இருப்பது தான் அவர்களுடைய பலமாகும் - என்றார். (ரி2)



## மனைவி போல் சிலை செய்து காதலை வெளிப்படுத்திய கணவர்

கர்நாடகா மாநிலத்தைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் தன் இறந்த மனைவிக்கு மெழுகு சிலை அமைத்து அவர் மனைவி மீதான காதலை வெளிப்படுத்தி இருக்கின்றமை இணையத்தில் பலராலும் பேசப்பட்டு வருகிறது.

கர்நாடகா மாநிலம் பெல்லாரி மாவட்டத்தைச் சேர்ந்த சீனிவாச குப்தா என்பவர் பிரம்மாண்டமான ஒரு வீடு கட்டி குடும்பத்தினருடன் புதுமனை புகுவிழா நிகழ்ச்சி நடத்த விரும்பினார். ஆனால் கடந்த சில வருடங்களுக்கு முன்பு விபத்து ஒன்றில் அவரது மனைவி இறந்துவிட்டார். இந்நிலையில் வீடு கட்டி முடித்த சீனிவாச குப்தா, கிரஹபிரவேசம் நடத்தும் போது தன் மனைவி இல்லாததை எண்ணி மனம் வருந்தியுள்ளார். இந்த நிலையில் அச்சு அசலாக தனது மனைவியைப் போல மெழுகு சிலை ஒன்றை சோபாவில் அமர்ந்த நிலையில் செய்தார். அது அவர் மனைவி உயிருடன் வந்து அமர்ந்து இருப்பது போலவே இருந்தது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அவரது மனைவி போலவே உள்ள அந்த மெழுகு சிலையை வைத்து புதுமனை புகுவிழா நிகழ்ச்சியை நடத்தினார். அந்த மெழுகு சிலையுடன் அமர்ந்து குடும்பத்தினர் அனைவரும் எடுத்துக்கொண்ட புகைப்படம் இணையத்தில் வைரலாக பரவியது.இது குறித்து அவரின் இரு மகள்கள் தெரிவிக்கையில், “இறந்த அம்மா நேரில் வந்து குடும்பத்துடன் புதுமனை விழாவை கொண்டாடியது போல இருந்தது” என்று தெரிவித்துள்ளனர்.





## டோனியின் தலைமைத்துவம்; புகழாரம் சூட்டினார் முரளி

புதுடில்லி, ஓக.11

டோனியின் தலைமைத்துவ அணுகு முறை மற்றும் கோட்பாடுகள் பார்ப்பதற்கு மிகவும் அருமையாக இருக்கும் என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் புகழாரம் சூட்டியுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான முரளிதரன் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

2007 ஆம் ஆண்டு நடைபெற்ற 20 ஓவர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இளம் வயது கப்டனான டோனி இந்திய அணிக்கு தலைமை தாங்கி கிண்ணத்தை வென்று கொடுத்தார். டோனியின் தலைமைத்துவ அணுகுமுறை மற்றும் கோட்பாடுகள் பார்ப்பதற்கு மிகவும் அருமையாக இருக்கும். ஏனெனில் அவர் பந்துவீச்சாளரிடம் பந்தை கொடுத்து பந்துவீச்சாளரையே தனது பந்து வீச்சுக்கு தகுந்த மாதிரி களத்தடுப்பை அமைத்து விட்டு பந்து வீசும்படி கூறுவார். அது சரியாக அமையாவிட்டால், பந்துவீச்சாளரிடம் அனுமதி பெற்று தானே களத்தடுப்பை உருவாக்குவார். பந்து வீச்சாளர் நன்றாக வீசிய பந்தை துடுப்பாட்ட வீரர் ஆறு ஓட்டங்கள் அடித்தால் பந்து வீச்சாளரைக் கைதட்டி பாராட்டுவார்.

ஆறு ஓட்டங்கள் அடித்தமைக்காக கவலைப்பட வேண்டாம் நல்ல பந்தை தான் துடுப்பாட்ட வீரர் தனது திறமையால் ஆறு ஓட்டங்களாக அடித்து இருக்கிறார் என்று தேற்றுவார். இதுபோன்ற பாராட்டுதல்கள் எல்லோரிடம் இருந்தும் வராது. சக வீரர் தனது தவறைத் திருத்திக் கொள்ள என்ன செய்ய வேண்டும் என்பதை எல்லோருக்கும் தெரியும்படி வெளிப்படையாகச் சொல்லாமல், தனியாக அழைத்து தெரிவிப்பார். அது அவருடைய வெற்றிகரமான கப்டன் செயற்பாட்டுக்கு ஒரு காரணமாகும். அமைதியாக சிந்திக்கும் திறன் கொண்ட அவர் சீனியர் வீரர்கள் கூறும் கருத்துகளைக் கேட்டு ஆலோசித்து முடிவு எடுப்பார். அணியை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்கு எந்த வீரர்கள் தனக்கு தேவை என்பதில் அவர் மிகவும் கவனமாக இருப்பார்- என்றார். (ரி2)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 11.08.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.